**அப்பி வெனுவென் அப்பி நிதியம் - 2023**

**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அப்பி வெனுவென் அப்பி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அது சம்பந்தமாக நிர்வகிக்கின்ற தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான “சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும். பொதுப்பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர், முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுதல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொலைபேசி கம்பனிகளால் நிதியத்தின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்ற பெறுமதியின் அடிப்படையில் தொலைதொடர்பு கோபுர வருவானம் இனங்காணப்பட்டிருந்தது. ஆதலால், உடன்படிக்கையின்படி நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய வருடத்துக்கு ஏற்புடைய வருமானத்தின் துல்லியத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் முறையியலொன்று இருக்கவில்லை. | வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ள தொகை தொடர்பான மூல ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், குறித்த கம்பனிகளால் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களை கையொப்பத்துடன் தருவித்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக வருமானங்களை இனங்கண்டு கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கு ஏற்புடையதாக உண்மையாக உறப்பட வேண்டிய நிர்வாகச் செலவினங்களின் தன்மை, அளவு அல்லது தரப்பினரை குறிப்பாக இனங்காணாமல் வீட்டுப் பயனாளிகளுக்கு செலுத்தப்பட்ட வீட்டு உதவித்தொகையில் 2 சதவீதம் அதாவது ரூபா 12,132,959 2023 திசெம்பர் 31ஆம் திகதியன்று அட்டுறு நிர்வாகச் செலவுகளாக ஆண்டின் வருமானத்துக்கு எதிராக பதிவழித்திருந்ததுடன் ஒதுக்கீடு ஒன்றாக கருதப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் வீடமைப்புத் திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளமையினால், அதன் ஒவ்வொரு கட்டமும் முடிந்த பின்னர் நிர்வாகச் செலவுகள் தொடர்பான பணம் முப்படை மற்றும் பொலிசுக்கு கட்டாயமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப்பகுதிக்கான உண்மையான செலவு, அட்டுறு செலவு மற்றும் ஒதுக்கீடுகளை சரியாக இனங்கண்டு கணக்கில் பதிதல் வேண்டும். |

## 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| உரிய நியமத்துக்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07இன் பந்தி 90 பிரகாரம், சொத்துக்கள் அவற்றின் மறுமதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும்போது, நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் நிலையான சொத்துக்களின் மறுமதிப்பீட்டின் மூலம் ரூபா 1,563,808 மறுமதிப்பீட்டு இலாபம் இனங்காணப்பட்டதெனினும், மேற்படி கணக்கீட்டு நியமத்தின்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07இன் பந்தி 90 பிரகாரம், மறுமதிப்பிடப்பட்ட குழு அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07இன் பந்தி 90 பிரகாரம் கணக்குகள் மூலம் உரிய வெளிப்படுத்தல்களை செய்ய வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 முதல் 2020 வரையிலான ஆண்டுகளில் வீட்டு நிர்மாணத் திட்டங்களுக்காக நிதியத்தால் கொள்வனவு செய்யப்பட்ட பித்தளை பிணையல்கள், வீட்டு வயரிங் பாகங்கள் உள்ளிட்ட நிர்மாணப் பொருட்களின் இருப்பு பெறுமதியான ரூபா1,071,546 நடைமுறை சொத்தாக கணக்கில் பதிவதற்குப் பதிலாக நிலையான சொத்தாக கணக்கில் பதியப்பட்டிருந்தது. | இந்த நிர்மாணப் பொருட்களின் இருப்பு பெறுமதி நாளேட்டு குறிப்பொன்று மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக சொத்துக்களை இனங்கண்டு கணக்கில் பதிதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 4,150,000 கொள்வனவு கிரயமான லோடர் பக்கோ பொறியொன்று (Skid Steer Loader) 2023 மே 30ஆம் திகதி எடுத்த முகாமைத்துவ சபை தீர்மானத்தின்படி கட்டணம் ஏதுமின்றி கடற்படையிடம் கைமாற்றுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. 2023 சனவரி 01 ஆம் திகதியன்று தேறிய பெறுமதி ரூபா 985,210 ஆன இந்தச் சொத்தினை நன்கொடையாக வழங்கியமை தொடர்பான கொடுக்கல்வாங்கலில் இலாபம் அல்லது நட்டத்தை இனங்கண்டு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை. | சொத்தின் தேறிய பெறுமதி நிலையான சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றி திரண்ட நிதியத்துடன் சீராக்கப்பட்டது. | சொத்துக்களை கையுதிர்த்தல் மூலம் எழுகின்ற இலாபம் அல்லது நட்டத்தை இனங்கண்டு இலாபநட்டக் கணக்கு மூலம் சீராக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கணக்குகளின்படி, வீட்டுத் தவணைப் பணம் ஏலவே செலுத்தப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்ட 69 நபர்களுக்குரிய ரூபா2,702,664 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட மீதித் தொகையிலிருந்து நீக்கப்பட்டிருப்பினும், அது ஆண்டின் வருமானமாக சான்றுபடுத்தப்படாமை, 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா1,464,000 தொகை பெற வேண்டிய மீதியொன்று இருந்த 16 வீட்டு உரிமையாளர்களுக்கான மீதி 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று இருந்த பெற வேண்டிய மீதி ஏட்டிலிருந்து நீக்கப்பட்டமை, 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன் பெற்ற மீதி ரூபா100,000 குறைவாகக் காட்டப்பட்டமை, வீட்டுத் தவணை வருமான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமை போன்றன காரணமாக ரணஜயபுர வீட்டுத் திட்டத்தில் தவணை வருமானமான காட்டப்பட்டுள்ள ரூபா69,323,714 பெறுமதி தொடர்பிலான சரியானத் தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் ஊடாக காட்டப்படாத முன்பு பெறப்பட்ட பணம் மற்றும் குறைவாகக் குறிப்பிடப்பட்ட ரூபா100,000 தொகையானது நாளேட்டு குறிப்பொன்று மூலம் சரி செய்வதற்கும், தவணைபணத்தை அறவிடுதல் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக எதிர்காலத்தில் நடைபெறவுள்ள முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. | வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கில் பதிதல் வேண்டும் என்பதுடன் ஏற்புடைய இடங்களில் விரிவான அட்டவணைகள் மூலம் அத்தகவல்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அட்டுறு செலவுகளின் மீதி ரூபா 109,648,125 ஆன போதிலும் அதற்குரிய அட்டவணையின்படி மீதி ரூபா 109,677,622 ஆக ரூபா 29,497 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | வேறுபாட்டிற்கான காரணம் இனங்காணப்பட்டுள்ளமையினால் நாளேட்டு குறிப்புக்கள் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதியானது அட்டவணைப்படுத்தப்பட்ட மீதிக்கு சமமாதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பகுதியளவு மற்றும் முழுமையான வீட்டு பயனாளிகளுக்கு தவணைப்பணம் செலுத்தல். | 7,780,412 | நலன் தொகை உரிய பயனாளிகளுக்கு கிடைத்தமை பற்றி உறுதிப்படுத்தும் பதிவேடு. | பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் பயனாளிகளின் கையொப்பத்துடன் பணம் பெறப்பட்டதற்கான உறுதிப்படுத்தல் கடிதம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், பயனாளிகளிடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதங்கள் தொடர்ந்தும் பெறப்பட்டு வருகின்றன. | நிதி ஒழுங்குவிதி 264(1) பிரகாரம் செயலாற்றி ஒவ்வொரு செலவு பொருட்டும் வவுச்சரில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த தொகையும் கிடைத்தமை பற்றி பணம் பெற்றவரிடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | பெறப்பட வேண்டிய தொலைத் தொடர்பு கோபுர வருமானம். | 21,840,910 | பெறப்பட வேண்டிய தொலைத் தொடர்பு கோபுர வருமானத்திற்கான மீதியை உறுதிப்படுத்தல். | பதில் வழங்கப்படவில்லை. | பெறப்பட வேண்டிய தொலைத் தொடர்பு கோபுர வருமானத்திற்கு தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து மீதி உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் தேறப்பட்ட 06 நிலையான வைப்புகளுக்கு ஏற்புடைய வட்டி வருமானம். | 19,330,990 | இந்த வட்டி வருமானம் தொடர்பான மூல ஆவணங்கள் மற்றும் கணக்குகளில் வட்டியை பதிவு செய்வதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பதிவேடுகள். | நிலையான வைப்பொன்று தேறப்பட்டதன் பிற்பாடு அதன் உறுதிப்படுத்தல் சம்பந்தப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வட்டி வருமானத்துக்கு ஏற்புடைய நேரொத்த அட்டவணைகள் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று, ரணஜயபுர வீட்டு உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை பற்றி பணம் ரூபா 43,503,101 ஆக இருந்ததுடன் இதில் 1 முதல் 5 ஆண்டுகள் வரை நிலுவையில் உள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூ. 26,220,080 மற்றும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள தொகை ரூபா 2,792,000 ஆக இருந்தது. இந்த நிலுவையில் உள்ள கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | ஓய்வு பெறுதல், லீவு இல்லாமல் கடமைக்கு சமுகமளிக்காமை, பதவி விலகல், மரணம், சிறையிலடைத்தல் போன்ற காரணங்களினால் நீண்ட கால நிலுவை தவணைப்பணங்கள் காணப்பட்டன. இதுதொடர்பில் முப்படை விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பரிந்துரைகள் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவை தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து தாமதமின்றி தவணைப்பணங்களை அறவிட்டுக் கொள்வதற்கும், நாளதுவரைப்படுத்திய பதிவேடுகளை பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று, கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு கோபுர வருமானம் ரூபா 21,840,910 ஆக இருந்ததுடன், உடன்படிக்கையின்படி, முந்திய மாதத்திற்கான வாடகைத்தொகை அடுத்த மாதத்தில் அறவிடப்பட வேண்டிய போதிலும், அறவிடப்பட வேண்டிய வாடகையான ரூபா 13,312,710 தொகை 02 முதல் 15 மாதங்கள் வரை தாமதமாகி இருந்தது.<br>நிதியத்துக்கு அறவிடப்பட வேண்டிய வருமானம் கணிசமான காலத்திற்கு வெளி நிறுவனங்களில் இருந்தமையானது, நிதிய முதலீட்டு வாய்ப்புக்கள் இழப்புக்கும், திரவ பணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிக்கல்கள் தோன்றுவதற்கும் வழிவகுத்தது. | ஒவ்வொரு மாத இறுதியிலும் உரிய நிறுவனங்களுக்கு வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் விழிப்பூட்டப்படுவதுடன், விரைவில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | உடன்படிக்கை பிரகாரம், வாடகை வருமானத்தை தாமதமின்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக சில கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகளில், உரிய திகதியில் கட்டணம் செலுத்தாமை தொடர்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், சில கம்பனிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கைகளின்படி, நிலுவை பட்டியல்கள் பொருட்டு தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அறவிடப்பட்டமை தொடர்பில் உறுதிசெய்யப்படவில்லை. | உடன்படிக்கையின்படி, உரிய மாத இறுதியிலும் கோபுர வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படும்போதும் செயற்படுத்தப்படும்போதும் நிலுவை வருவானம் தொடர்பான போதியளவு பிரிவுகளை சேர்த்து அதற்கேற்ப செயலாற்றுதல் வேண்டும். |
| (ஈ) | ரணஜயபுர வர்த்தக தொகுதியில் உள்ள 21 கடைகளின் குத்தகை உடன்படிக்கையின்படி, மாத வாடகை உரிய மாதத்தின் 25 ஆம் திகதிக்கு முன் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியளவில், நிலுவை வாடகை ரூபா483,960 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 218,150 பொருட்டு மாத்திரம் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | காலப் பகுப்பாய்வு 2023.12.31 ஆம் திகதி வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2023.01.01 ஆம் திகதியன்று கிடைக்க வேண்டிய ரூபா297,260 தொகையை எதிர்கால கணக்கு நடவடிக்கைகள்மூலம் நாளேட்டு குறிப்புகள் மூலம் சரிசெய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். | உடன்படிக்கை பிரகாரம் மாதாந்த வாடகையை உரிய திகதியில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் நாளதுவரைப்படுத்தப்பட்ட அறிக்கைககளை பேணுதல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 06 ஆம் இலக்க அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தின் 09 ஆம் பிரிவு | முந்திய பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, “அப்பி வெனுவென் அப்பி நிதியம்” என்ற பெயரில் நிதியமானது இலங்கை மத்திய வங்கியில் ஒரு கணக்கினைப் பேண வேண்டும் என்பதுடன் மேற்படி சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ், நிதியத்துக்கு செலுத்த வேண்டிய பணம் | நிதியத்தின் தொலைத்தொடர்பு கோபுர வருமானம், வீட்டு தவணைப்பணங்கள், கடை வாடகைகள் மற்றும் நன்கொடைப் பணம் போன்றவற்றை சேகரித்தலானது வணிக வங்கிகளில் உள்ள கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதனால், இலங்கை மத்திய | சட்டத்தின் 09 ஆம் பிரிவு பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறித்த கணக்கில் வரவு வைக்க வேண்டிய போதிலும். நிதியத்தினால் இலங்கை மத்திய வங்கியில் கணக்கொன்று பேணப்படவில்லை. | வங்கியில் புதிய கணக்கைத் தொடங்கினால், பிரயோகரீதியில் பல சிக்கல்களை முகங்கொடுக்க நேரிடும். | |
| (ஆ) | 2008 இன் 06 ஆம் இலக்க அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம் மூலம் திருத்தப்பட்ட 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம். | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, நிதியத்தின் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானத்தில் 05 சதவீதத்தை பிடித்துவைக்கும் வரியாக ரூபா13,771,820 அறவிடப்பட்டிருந்தடன், அந்த பிடித்துவைக்கும் வரித்தொகையை நிதியத்தின் செலவு ஒன்றாக ஆண்டு மிகைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. . அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு பிரகாரம், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தால் அனுமதிக்கப்படுகின்ற அளவிற்கு நிதியத்தின் வருமானம் அல்லது இலாபத்தின் மீது செலுத்த வேண்டிய வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். வரி கடப்பாடு இருந்ததா என உறுதிபடுத்திக் கொள்ளல் அல்லது பிடித்துவைக்கும் வரியைக் குறைக்க வேண்டாம் என உரிய வங்கிகள்மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியச் சட்டத்தின் 10ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதி எனும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்வதற்காக எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | வருமான வரி விலக்கினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தை கொண்டு உறுதிபடுத்திக் கொள்ளுதல் மற்றும் பிடித்துவைக்கும் உபமுகவருக்கு (வங்கி) சமர்ப்பித்து, வரி பிடித்துவைக்கும் தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கைமூலம் திருத்தப்பட்டவாறான நிதி ஒழுங்குவிதி 877(2)(இ) மற்றும் | ஒவ்வொரு காலாண்டின் இறுதியில், நிதியத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யக்கூடியவாறு நிதியத்தின் முக்கிய பணிகள் தொடர்பாக காலாண்டு அறிக்கை | நிதியத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யக்கூடியவாறு நிதியத்தின் முக்கிய பணிகள் தொடர்பாக காலாண்டு அறிக்கை, காலாண்டு முடிவடைந்து | நிதியத்தின் முன்னேற்றம் பற்றிய காலாண்டு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டுநெறி 04 இன் பந்தி 3. | தயாரிக்கப்பட்டு, காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன் அரச நிதித் திணைக்களத்துக்கும், தேசிய வரவுசெலவுத் திணைக்களத்துக்கும் பிரதிகள் சகிதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கையை 2023ஆம் ஆண்டு பொருட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 15 நாட்களுக்கு முன் அரச நிதித் திணைக்களத்துக்கும், தேசிய வரவுசெலவுத் திணைக்களத்துக்கும் பிரதிகள் சகிதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கைமூலம் திருத்தப்பட்டவாறான நிதி ஒழுங்குவிதி 877(2)(இ) மற்றும் வழிகாட்டுநெறி 04 இன் பந்தி 2.2. | நிதியத்தின் வருமானத்தை இனங்காணும்போது, பெறுவனவு வவுச்சர்கள், பற்றுச்சீட்டுகள், விலைப்பட்டியல்கள் போன்ற மூல ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வங்கி கூற்றின் வரவில் காட்டப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் அனைத்து வருமானங்களும் இனங்காணப்பட்டிருந்தன. | நேரடியாக பணம் வரவு வைக்கின்ற நபர்களின் வரவுத்தாள்கள் இந்த நிதியத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும், தொடர்பாடல் கோபுரங்கள் வருமானத்தை பெறும் போது விலைப்பட்டியல்கள் மற்றும் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளை கருத்திற்கொண்டு கணக்கில் பதிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கணக்கு தகவல்கள் சான்றுபடுத்தும் வகையில் மூல ஆவணங்களுடன் கணக்கில் பதிதல் வேண்டும். |
| (உ) | 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கைமூலம் திருத்தப்பட்டவாறான நிதி ஒழுங்குவிதி 877(2)(இ) மற்றும் வழிகாட்டுநெறி 04 இன் பந்தி 5.2 மற்றும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01(21). | உரிமையாண்மை மாற்றம்/தேறிய சொத்துக்கள் பற்றிய கூற்று நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் முக்கிய அங்கமாக சேர்க்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று சேர்க்கப்படவில்லை. | எதிர்வரும் கணக்காண்டில் நிதியத்தின் உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்றினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | ஒழுங்குவிதிகள் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கைமூலம் திருத்தப்பட்டவாறான நிதி ஒழுங்குவிதி 877(2)(இ) மற்றும் வழிகாட்டுநெறி 04 இன் பந்தி 7. | உரிய கணக்காண்டு பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு வரையறைகளையும் உண்மையான வரையறைகளையும் ஒப்பிட்டு மாறுபாடுகளுக்கான காரணங்கள் சகிதம் (சுருக்கமாக) கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அத்தகைய மாறுபாடு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.. | உரிய கணக்காண்டு பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு வரையறைகளையும் உண்மையான வரையறைகளையும் ஒப்பிட்டு மாறுபாடுகளுக்கான காரணங்கள் சகிதம் (சுருக்கமாக) பாதீட்டு இணக்க ஆவணத்தை கணக்குகளுடன் எதிர்வரும் கணக்காண்டில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது மக்கள் நன்கொடைகளை சேகரிப்பதற்காக நிதியத்தினால் பேணப்படுகின்ற மூன்று நடைமுறைக் கணக்குகளில் 2018 முதல் 2023 வரையிலான காலப்பகுதியினுள் பெறப்பட்ட மொத்த நன்கொடைத் தொகை ரூபா1,081,793 மீதி இருந்தது. இந்தக் கணக்குகள் தொடர்பாக இந்த ஆண்டினுள் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளில் பணம் எதுவும் செலுத்தப்படாமையினால், குறைந்தபட்ச வைப்புத்தொகையைப் பேணுவதன்மூலம் மேலதிக பணத்தை பயனுறு முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டிலலும் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. | நடைமுறைக் கணக்குகளில் பேணப்பட வேண்டிய குறைந்தபட்ச மீதிகள் எஞ்சிகின்றவாறு மேலதிக பணத்தை முதலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான, பயனுறு நிதி முகாமைத்துவம் பேணப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 75,144,999 மிகையாக இருந்தவுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 398,875,766 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில் ரூபா 323,730,767 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்றிட்ட அபிவிருத்தி செலவு ரூபா 412,925,191 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக விளங்கியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரணஜயபுர வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளுக்கான தவணைப்பணங்களை 69 உறுப்பினர்கள் செலுத்தி முடிந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இரு தரப்பினர்களால் செய்துகொண்ட உடன்படிக்கையின் 2ஆம் பிரிவு பிரகாரம், தவணைப்பணம் செலுத்தி முடித்த உறுப்பினர்களுக்கு வீடுகளின் உரிமை கைமாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இபலோகம பிரதேச செயலகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் மற்றும் காணி அமைச்சு ஆகிய அரச நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்டு ரணஜயபுர வீட்டுப் பயனாளிகளுக்கு உரித்துச் சான்றிதழ்களை வழங்கும் செயன்முறை விரைவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின்படி, 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில், 379 பகுதியளவு வீடுகள் மற்றும் 29 முழுமையான வீடுகள் பொருட்டு உதவித் தொகையாக ரூபா 423,275,789 செலுத்தி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், 2023 திசெம்பர் 31ஆம் இறுதியளவில் தொடர்ந்தும் ரூபா 106,613,263 மற்றும் 2021 ஆம் ஆண்டு பொருட்டு ரூபா 3,034,862 செலுத்த வேண்டியுள்ளது. | நிருமாணம் தொடர்பான நடைமுறை சிக்கல்கள் உள்ளமையினால், சில பயனாளிகளின் தவணைப்பணத்தை தொடர்ந்தும் செலுத்த வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், மேலும் செலுத்த வேண்டிய இந்த தொகையை உடனடியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | செயல் திட்டத்திற்கு ஏற்றவாறு செயலாற்றுதல் வேண்டும். |

### 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீட்டு நலன்களை செலுத்தும்போது உரிய பயனாளிகளுக்கு நேரடியாக பணம் செலுத்தும் முறைக்கு பதிலாக உரிய இராணுவக் கணக்குகளுக்கு நிதியத்தினால் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் மொத்தமாக | நிர்வாகப் பணிகளை எளிதாக்கும் வகையில், உரிய பயனாளிகளைத் தெரிவுசெய்தல் மற்றும் உத்தியோகபூர்வ கணக்குகள் மூலம் பயனாளிகளுக்குப் பணம் வழங்குதல் முப்படையினர் மற்றும் பொலிஸ் ஆகியோரால் | நலக் கொடுப்பனவுப் பணம் குறிப்பிட்ட திகதியில் உரிய பயனாளிக்கு கிடைத்தமை பற்றி தாமதமின்றியும், சரியாகவும் பயனாளிகள் பணத்தை பெறுவதை |

| | | |
|---|---|---|
| ரூபா333.9 மில்லியன் விடுவிக்கப்பட்ட போதிலும், அப்பணம் குறிப்பிட்ட திகதியில் உரிய பயனாளிக்கு கிடைத்திருப்பதை உடனடியாக உறுதிசெய்யும் முறையியல் ஒன்றின் தேவைப்பாடு 2021 ஆம் ஆண்டு முதல் வலியுறுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு வரையிலும் அது முறையாக செயற்படுத்தப்படவில்லை. | மேற்கொள்ளப்படுகிறது. நிர்மாணம் நிறைவடைந்தது என கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர், உரிய இராணுவத்தின் பிரிவு தளபதி, நலன்புரி பணிப்பாளர் ஆகியோர் பரிந்துரைகளை சமர்ப்பிப்பார்கள். | உறுதிசெய்யும் முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இன் 06 ஆம் இலக்க அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தின் 11(6) ஆம் பிரிவு பிரகாரம், நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை என்பன பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் தொடக்கத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையிலான அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | இந்த நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை என்பன ஆரம்பத்திலிருந்து சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் தற்போது உரிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சட்டத்தின் பிரிவுகள் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும். |